**பள்ளிக் கல்வித்துறை**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர்,**

**பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்**

**சென்னை – 600006.**

**ந.க.எண்.2220/ ஆ8 / கலைத்திருவிழா/ ஒபக/ 2025, நாள்:24.07.2025**

**பொருள்:** பள்ளிக் கல்வி – **2025–26** – கல்வி சாரா செயல்பாடுகள் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் "**கலைத்திருவிழா**" போட்டிகள் நடத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – சார்ந்து.

**பார்வை:** 2022 – 23 மற்றும் 2024–25 ஆம் ஆண்டில் சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்.

************

2022–23 மற்றும் 2024–25 ஆம் ஆண்டுகளின் சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையில் **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்** அவர்களின் அறிவிப்பின்படி, கலைத்திருவிழாப் போட்டிகள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

2025–26 ஆம் ஆண்டிற்கான கலைத்திருவிழாப் போட்டிகள் அரசு பள்ளி மாணவர்களுக்குத் தனியாகவும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்குத் தனியாகவும் பின்வரும் ஐந்து பிரிவுகளில் **"பசுமையும் பாரம்பரியமும்"** என்ற மையக்கருத்தின் அடிப்படையில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இத்தலைப்பானது தமிழ்நாட்டின் தொன்மைச்சிறப்பு, பாரம்பரியம், நாகரீகம், பண்பாடு ஆகியவற்றைப் பறைசாற்றும் விதத்தில் மாணவர்கள் அறிந்திடும் முகத்தான் வரையறுக்கப்பட்டுள்ளது.

| பிரிவு | வகுப்புகள் | போட்டிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பிரிவு 1 | 1 மற்றும் 2 ஆம் வகுப்பு | 6 |
| பிரிவு 2 | 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | 12 |
| பிரிவு 3 | 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | 14 |
| பிரிவு 4 | 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | 34 |
| பிரிவு 5 | 11 மற்றும் 12 ஆம் வகுப்பு | 34 |

## கலைத்திருவிழா 2025–26 – போட்டிகள்

### பிரிவு 1 : 1 & 2 ஆம் வகுப்புகள்

| வ.எண். | வகுப்பு | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|---|
| 1 | I & II | ஒப்புவித்தல் போட்டி – மழலையர் பாடல் (தமிழ்) Tamil Rhymes including ஆத்திச்சூடி | 3 நிமிடங்கள் |
| 2 | I & II | கதை கூறுதல் | 5 நிமிடங்கள் |
| 3 | I & II | வண்ணம் தீட்டுதல் | 60 நிமிடங்கள் |
| 4 | I & II | ஒப்புவித்தல் போட்டி – மழலையர் பாடல் (ஆங்கிலம்) | 3 நிமிடங்கள் |
| 5 | I & II | மாறுவேடப் போட்டி | 3 நிமிடங்கள் |
| 6 | I & II | களிமண் பொம்மைகள் செய்தல் | 60 நிமிடங்கள் |

### பிரிவு 2 : 3, 4 & 5 ஆம் வகுப்புகள்

| வ.எண். | வகுப்பு | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|---|
| 1 | III, IV & V | பேச்சுப் போட்டி | 3 நிமிடங்கள் |
| 2 | III, IV & V | திருக்குறள் ஒப்புவித்தல் | 3 நிமிடங்கள் |
| 3 | III, IV & V | மெல்லிசை – தனிப்பாடல் | 5 நிமிடங்கள் |
| 4 | III, IV & V | தேச பக்தி பாடல்கள் | 5 நிமிடங்கள் |
| 5 | III, IV & V | களிமண் பொம்மைகள் செய்தல் | 60 நிமிடங்கள் |
| 6 | III, IV & V | மாறுவேடப் போட்டி | 3 நிமிடங்கள் |
| 7 | III, IV & V | நாட்டுப்புற நடனம் (தனி) | 5 நிமிடங்கள் |
| 8 | III, IV & V | நாட்டுப்புற நடனம் (குழு) (4 – 9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 9 | III, IV & V | பரத நாட்டியம் (தனி) | 5 நிமிடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| **10** | III, IV & V | பரத நாட்டியம்(குழு)<br>(4 – 9 பேர்) | 5 நிமிடங்கள் |
| **11** | III, IV & V | ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | 60 நிமிடங்கள் |
| **12** | III, IV & V | தனிநபர் நடிப்பு | 3 நிமிடங்கள் |

**பிரிவு 3 : 6, 7 & 8 ஆம் வகுப்புகள்**

**வகை – 1: கவின்கலை / நுண்கலை**

| **வ.எண்** | **போட்டிகள்** | **கால அளவு** |
|---|---|---|
| 1. | ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | 45 நிமிடங்கள் |
| 2. | களிமண் சுதை வேலைப்பாடு | 90 நிமிடங்கள் |
| 3 | மணல் சிற்பம் | 90 நிமிடங்கள் |
| 4 | ரங்கோலி | 60 நிமிடங்கள் |

**வகை – 2: இசை (வாய்ப்பாட்டு)**

| **வ.எண்** | **போட்டிகள்** | **கால அளவு** |
|---|---|---|
| 5 | செவ்வியல் இசை – தனிப்பாட்டு | 5 நிமிடங்கள் |
| 6 | நாட்டுப்புற பாடல் – தனிப்பாட்டு | 5 நிமிடங்கள் |
| 7 | வில்லுப்பாட்டு – குழு (1 + 4 பேர்) | 10 நிமிடங்கள் |

**வகை – 3: நடனம்**

| **வ.எண்** | **போட்டிகள்** | **கால அளவு** |
|---|---|---|
| 8 | கிராமிய நடனம் (தனி) | 5 நிமிடங்கள் |
| 9 | கிராமிய நடனம் – குழு (4 – 9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 10 | பரதநாட்டியம் (தனி) | 5 நிமிடங்கள் |
| 11 | பரதநாட்டியம் – குழு (4 – 9 பேர்) | 5 நிமிடங்கள் |

**வகை – 4: நாடகம்**

| **வ.எண்** | **போட்டிகள்** | **கால அளவு** |
|---|---|---|
| 12 | தனி நபர் நடிப்பு | 3 நிமிடங்கள் |
| 13 | பாவனை நடிப்பு (Miming) – தனி | 3 நிமிடங்கள் |
| 14 | பலகுரல் பேச்சு | 3 நிமிடங்கள் |

## பிரிவு 4:    9  & 10 ஆம் வகுப்புகள்)

**வகை – 1: கவின்கலை / நுண்கலை**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 1. | ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | 60 நிமிடங்கள் |
| 2. | கேலி சித்திரம் வரைதல் & வண்ணம் தீட்டுதல் | 60 நிமிடங்கள் |
| 3. | ரங்கோலி | 60 நிமிடங்கள் |
| 4. | பானை ஓவியம் | 60 நிமிடங்கள் |
| 5 | களிமண் சிற்பம் | 60 நிமிடங்கள் |
| 6 | மணல் சிற்பம் | 60 நிமிடங்கள் |
| 7 | காகிதக்கூழ் பொருள்கள்<br>செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பொருள்கள்) | 90 நிமிடங்கள் |

**வகை – 2: இசை (வாய்ப்பாட்டு)**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 8 | நாட்டுப்புற பாடல்   (Folk) –  தனி | 5 நிமிடங்கள் |
| 9 | வில்லுப்பாட்டு – குழு (1 + 4 பேர்) | 10 நிமிடங்கள் |
| 10 | செவ்வியல் இசை (Traditional /Classical) – தனி | 5 நிமிடங்கள் |

**வகை – 3: கருவி இசை – தோல் கருவி**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 11 | பம்பை / உருமி / உடுக்கை | 5 நிமிடங்கள் |
| 12 | பறை | 5 நிமிடங்கள் |
| 13 | மிருதங்கம் / தபேலா/ தவில்/ கடம் | 5 நிமிடங்கள் |
| 14 | டிரம்ஸ் (Triple Drum / Drums) | 5 நிமிடங்கள் |

**வகை – 4: கருவி இசை – துளை – காற்றுக் கருவிகள்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 15 | நாதஸ்வரம் | 5 நிமிடங்கள் |
| 16 | புல்லாங்குழல் | 5 நிமிடங்கள் |
| 17 | ஹார்மோனியம் (Harmonium) | 5 நிமிடங்கள் |
| 18 | கீ போர்டு (Keyboard) | 5 நிமிடங்கள் |

**வகை – 5: கருவி இசை – தந்திக் கருவிகள்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 19 | வயலின் (Violin) | 5 நிமிடங்கள் |
| 20 | வீணை / விசித்திர வீணை அல்லது கோட்டு வாத்தியம் | 5 நிமிடங்கள் |
| 21 | கிட்டார் (Guitar)/ மாண்டலின் (Mandolin) | 5 நிமிடங்கள் |

**வகை – 6: நடனம்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 22 | நாட்டுப்புற நடனம் – தனி | 5 நிமிடங்கள் |
| 23 | நாட்டுப்புற நடனம் – குழு (4 – 9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 24 | பரதநாட்டியம்– தனி | 5 நிமிடங்கள் |
| 25 | பரதநாட்டியம் – குழு (4 –9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 26 | பிறவகை நடனம் – தனி | 5 நிமிடங்கள் |
| 27 | பிறவகை நடனம் (free style) – குழு (4 –9 பேர்) | 5 நிமிடங்கள் |

**வகை – 7: நாடகம்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 28 | தெருக்கூத்து – குழு(4–8 பேர்) | 10 நிமிடங்கள் |
| 29 | வீதி நாடகம் – குழு(4–8 பேர்) | 10 நிமிடங்கள் |
| 30 | தனிநபர் நடிப்பு | 3 நிமிடங்கள் |
| 31 | பல குரல் பேச்சு(Mimicry) | 3 நிமிடங்கள் |
| 32 | இலக்கிய நாடகம் – குழு (5 பேர்) | 10 நிமிடங்கள் |
| 33 | பாவனை நடிப்பு (Miming) – தனி | 3 நிமிடங்கள் |
| 34 | பொம்மலாட்டம் – குழு (4–8 பேர்) (தோல்பாவை, மரப்பாவை, நிழற்பாவை) | 10 நிமிடங்கள் |

## பிரிவு 5 : (11 & 12 ஆம் வகுப்புகள்)

**வகை – 1: கவின்கலை / நுண்கலை**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 1. | ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | 60 நிமிடங்கள் |
| 2. | கேலி சித்திரம் வரைதல் & வண்ணம் தீட்டுதல் | 60 நிமிடங்கள் |
| 3. | ரங்கோலி | 60 நிமிடங்கள் |
| 4. | பானை ஓவியம் | 60 நிமிடங்கள் |

| | | |
|---|---|---|
| 5 | களிமண் சிற்பம் | 60 நிமிடங்கள் |
| 6 | மணல் சிற்பம் | 60 நிமிடங்கள் |
| 7 | காகிதக்கூழ் பொருள்கள்<br>செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பொருள்கள்) | 90 நிமிடங்கள் |

**வகை – 2: இசை (வாய்ப்பாட்டு)**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 8 | நாட்டுப்புற பாடல் (Folk) – தனி | 5 நிமிடங்கள் |
| 9 | வில்லுப்பாட்டு – குழு (1 + 4 பேர்) | 10 நிமிடங்கள் |
| 10 | செவ்வியல் இசை (Traditional /Classical) – தனி | 5 நிமிடங்கள் |

**வகை – 3: கருவி இசை – தோல் கருவி**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 11 | பம்பை / உருமி / உடுக்கை | 5 நிமிடங்கள் |
| 12 | பறை | 5 நிமிடங்கள் |
| 13 | மிருதங்கம் / தபேலா/ தவில்/ கடம் | 5 நிமிடங்கள் |
| 14 | டிரம்ஸ் (Triple Drum / Drums) | 5 நிமிடங்கள் |

**வகை – 4: கருவி இசை – துளை – காற்றுக் கருவிகள்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 15 | நாதஸ்வரம் | 5 நிமிடங்கள் |
| 16 | புல்லாங்குழல் | 5 நிமிடங்கள் |
| 17 | ஹார்மோனியம் (Harmonium) | 5 நிமிடங்கள் |
| 18 | கீ போர்டு (Keyboard) | 5 நிமிடங்கள் |

**வகை – 5: கருவி இசை – தந்திக் கருவிகள்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 19 | வயலின் (Violin) | 5 நிமிடங்கள் |
| 20 | வீணை / விசித்திர வீணை அல்லது கோட்டு வாத்தியம் | 5 நிமிடங்கள் |
| 21 | கிட்டார் (Guitar)/ மாண்டலின் (Mandolin) | 5 நிமிடங்கள் |

**வகை – 6: நடனம்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 22 | நாட்டுப்புற நடனம் – தனி | 5 நிமிடங்கள் |
| 23 | நாட்டுப்புற நடனம் – குழு (4 – 9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 24 | பரதநாட்டியம்– தனி | 5 நிமிடங்கள் |
| 25 | பரதநாட்டியம் – குழு (4 –9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 26 | பிறவகை நடனம் – தனி | 5 நிமிடங்கள் |
| 27 | பிறவகை நடனம் (free style) – குழு (4 –9 பேர்) | 5 நிமிடங்கள் |

**வகை – 7: நாடகம்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 28 | தெருக்கூத்து – குழு(4–8 பேர்) | 10 நிமிடங்கள் |
| 29 | வீதி நாடகம் – குழு(4–8 பேர்) | 10 நிமிடங்கள் |
| 30 | தனிநபர் நடிப்பு | 3 நிமிடங்கள் |
| 31 | பல குரல் பேச்சு(Mimicry) | 3 நிமிடங்கள் |
| 32 | இலக்கிய நாடகம் – குழு (5 பேர்) | 10 நிமிடங்கள் |
| 33 | பாவனை நடிப்பு (Miming) – தனி | 3 நிமிடங்கள் |
| 34 | பொம்மலாட்டம் – குழு (4–8 பேர்)<br>(தோல்பாவை, மரப்பாவை, நிழற்பாவை) | 10 நிமிடங்கள் |

**<u>பள்ளி அளவிலான போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்</u>**

- ❖ அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் (சிறப்புப் பள்ளிகள் உட்பட) பயிலும் அனைத்து மாணவ/ மாணவியரை ஊக்கப்படுத்தி அவர்களுக்கான வாய்ப்பினை உருவாக்கி, இவ்வாண்டிற்கான கலைத்திருவிழாப் போட்டிகளில் பெரும்பான்மையான மாணவர்களைப் பங்கு பெறச்செய்தல் வேண்டும்.
- ❖ கலைத்திருவிழாப் போட்டிகளில் பங்குபெறுவதற்காக மாணவர்களிடமிருந்து எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படக் கூடாது.
- ❖ கலைத்திருவிழாப் போட்டிகளைத் திட்டமிட்டு நடத்துவதற்கு, பள்ளியளவில் ஒரு அமைப்புக் குழுவினை உருவாக்கி, பள்ளியளவில் ஒரு சிறப்பு நிகழ்வாக நடத்திட வேண்டும். பள்ளி அளவில் நடைபெறும் கலைத்திருவிழாவில் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள், பள்ளி மேலாண்மைக்குழு

உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளின் முழுமையான ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் பெறுதல் இன்றியமையாதது.

**பள்ளிஅளவிலான அமைப்புக் குழு உறுப்பினர்கள்**

1. பள்ளித் தலைமையாசிரியர் முதன்மை அமைப்பாளராக செயல்படுவார்.
2. உதவி அமைப்பாளராக அப்பள்ளிக்கான கலை பண்பாட்டு மன்றப் பொறுப்பாசிரியர் /ஆசிரியர் செயல்படுவார்.
3. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி – 1 நபர்
4. பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் / உறுப்பினர் – 1 நபர்
5. பெற்றோர் ஆசிரியர் கழகப் பிரதிநிதி – 1 நபர்

❖ பள்ளியின் தலைமை ஆசிரியர் போட்டிகளில் நடுவர்களாகப் பணிபுரிய உரிய கலைப்பிரிவின் வல்லுநர்களைக் கண்டறிந்து, கலைத்திருவிழா அமைப்புக் குழுவினரிடம் கலந்தாலோசித்து நடுவர் பட்டியல் ஒன்று தயார் செய்து அதற்கான முன் அனுமதியை வட்டாரக் கல்வி அலுவலர்/ மாவட்டக்கல்வி அலுவலர்களிடமிருந்து பெற வேண்டும். இந்த பட்டியலில் இருந்து தான் நடுவர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

❖ பள்ளி அளவிலான அனைத்துப் போட்டிகளும் **"பசுமையும் பாரம்பரியமும்"** என்ற மையக்கருத்தினை அடிப்படையாகக்கொண்டு குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

❖ போட்டிகளை மதிப்பீடு செய்வதற்காக வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

❖ மாணவ, மாணவிகளுக்கென தனித்தனியாக போட்டிகள் நடைபெறாது. ஆண், பெண் பாகுபாடின்றி பொதுப் போட்டியாக நடைபெறும்.

❖ ஒரு நபர் எவையேனும் மூன்று தனிப் போட்டிகள் மற்றும் இரண்டு குழுப்போட்டிகளில் மட்டுமே பங்குபெற முடியும்.

❖ ஒவ்வொரு போட்டிக்கும், அந்தந்த போட்டிக்கான நடுவர்கள் எடுக்கும் முடிவே இறுதியானது.

**EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல்**

❖ ஒவ்வொரு போட்டியிலும் பங்கு பெறும் மாணவ, மாணவியரின் விவரங்களை சேகரித்து பள்ளி அளவில் போட்டி வாரியாக போட்டிகள் நடைபெறுவதற்கு முன்பாகவே உரிய காலக்கெடுவிற்குள் EMIS – ல் பதிவு செய்தல் வேண்டும்.

❖ ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களின் விவரங்களை போட்டி வாரியாக EMIS–ல் உள்ளீடு செய்தல் வேண்டும்.

- ❖ பள்ளி அளவில் நடைபெறும் ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடத்தில் வெற்றிபெறும் தனிநபர்/குழுவினர் மட்டுமே வட்டார அளவில் நடைபெறும் போட்டியில் பங்கு பெறத் தகுதி பெற்றவராவார்.
- ❖ EMIS தளத்தில் தரவுகள் உள்ளீடு செய்யும் பணிகள் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

**சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவ மாணவிர்களுக்கான (CWSN) கலைத்திருவிழா போட்டிகள் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள்**

<u>சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவ மாணவியர்கள் (CWSN) பெரும்பான்மையான அளவில் இக்கலைத்திருவிழாப் போட்டிகளில் பங்குபெறுவதை உறுதிசெய்தல் வேண்டும்.</u> மொத்தமாக உள்ள 21 வகையான குறைபாடுகளுள், கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள சிலவகை மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு மட்டும் கடந்த ஆண்டினைப் போலவே ஒரு சில போட்டிகள் தனியாக நடைபெறும். இப்போட்டிகளை சார்ந்த பள்ளிக்கான சிறப்புப் பயிற்றுநர் பள்ளித் தலைமையாசிரியருடன் இணைந்து நடத்துதல் வேண்டும். அட்டவணையில் குறிப்பிடப்படாத குறைபாடுள்ள மாணவர்களை ஊக்குவித்து மற்ற மாணவர்களுடன் இணைந்து அனைத்துப் போட்டிகளிலும் பங்குபெறச் செய்தல் வேண்டும்.

| வ.எண். | வகுப்பு | போட்டிகள் | குறைபாடு வகை | கால அளவு |
|---|---|---|---|---|
| 1 | I to II | வண்ணம் தீட்டுதல் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 2 | I & II | மாறுவேடப் போட்டி | ID, ASD,CP | 03 நிமிடங்கள் |
| 3 | III, IV & V | களிமண் பொம்மைகள் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 4 | III, IV & V | மாறுவேடப் போட்டி | ID, ASD,CP | 03 நிமிடங்கள் |
| 5 | VI, VII & VIII | ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | ID, ASD,CP | 45 நிமிடங்கள் |
| 6 | VI, VII & VIII | களிமண் சுதை வேலைப்பாடு | ID, ASD,CP | 90 நிமிடங்கள் |
| 7 | VI, VII & VIII | மணல் சிற்பம் | ID, ASD,CP | 90 நிமிடங்கள் |
| 8 | IX & X | பானை ஓவியம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 9 | IX & X | களிமண் சிற்பம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 10 | IX & X | மணல் சிற்பம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | IX & X | காகிதக்கூழ் பொருள்கள் செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பொருள்கள்) | ID, ASD,CP | 90 நிமிடங்கள் |
| 12 | XI & XII | பானை ஓவியம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 13 | XI & XII | களிமண் சிற்பம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 14 | XI & XII | மணல் சிற்பம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 15 | XI & XII | காகிதக்கூழ் பொருள்கள் செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பொருள்கள்) | ID, ASD,CP | 90 நிமிடங்கள் |

- ❖ Intellectual Disability (ID), Autism Spectrum Disorder (ASD), Cerebral Palsy (CP) ஆகிய குறைபாடுள்ள மாணவர்கள் அனைவரும் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள போட்டிகளில் பங்கேற்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- ❖ மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுள்ள மாணவர்களுக்கான போட்டிகள் அவர்களின் சூழலுக்கு ஏற்றவாறு பள்ளி அளவிலோ அல்லது பள்ளி ஆயத்தப் பயிற்சி மையத்திலோ நடத்தப்பட வேண்டும்.
- ID, ASD, CP ஆகிய குறைபாடுள்ள மாணவர்களுக்கான போட்டிகளில் பங்கேற்கும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் படைப்புகள் காணொலிகளாக (video) சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரின் Login மூலம் EMIS–தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- ID, ASD, CP ஆகிய குறைபாடுள்ள மாணவர்களுக்கான போட்டிகள் அனைத்தும் காணொலி வாயிலாகவே தேர்ந்தெடுக்கப்படுவதால், பள்ளி அளவிலான

போட்டிகள் நடைபெறும் போதே தெளிவாகக் காணொலி எடுத்து பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

- காணொலியானது, 5 நிமிடத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். அதாவது 3 நிமிட கால அளவு கொண்ட போட்டிகளுக்கான ஒவ்வொரு காணொலியும் 3 நிமிடங்களுக்கு மிகாமலும், அதேபோல் 5 நிமிட கால அளவு கொண்ட போட்டிகளுக்கான ஒவ்வொரு காணொலியும் 5 நிமிடங்களுக்கு மிகாமலும் மற்றும் குறிப்பாக 5 நிமிடங்களுக்கு மேலாக கால அளவு கொண்ட அனைத்து போட்டிகளுக்கான ஒவ்வொரு காணொலியும், ஒவ்வொரு மாணவரின் படைப்பினை முழுமையாகவும், தெளிவாகவும் காணும் வகையில் 5 நிமிடத்திற்கு மிகாமலும் தொகுத்து பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- காணொலிகளை உள்ளீடு செய்யும் போது, சார்ந்த பள்ளிக்குரிய Google account–ன் கீழ் உள்ள Google Drive–ல் காணொலிகளை பதிவேற்றம் செய்து அதன் Google Drive–link (url) ஐ மட்டும் copy செய்து anyone with the link –viewer option enable செய்து EMIS தளத்தில் உள்ளீடு செய்யப்படுதல் வேண்டும்.

**ID, ASD, CP ஆகிய குறைபாடுள்ள மாணவர்களுக்கான மற்ற போட்டிகள்**

ID, ASD, CP ஆகிய குறைபாடுள்ள மாணவர்களுக்கான தனிப் போட்டிகள் தவிர்த்து, மீதமுள்ள போட்டிகளில் அவர்கள் சக மாணவர்களுடன் பங்கேற்கலாம். அவ்வாறு பங்குபெறும் மாணவர்களின் தகவல்கள் பள்ளியளவில் EMIS தளத்தில் அந்தந்த பிரிவிற்கான போட்டிகளில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

**ID, ASD, CP ஆகிய குறைபாடுகள் தவிர மீதமுள்ள 18 வகையான குறைபாடுடைய மாணவர்களுக்கான போட்டிகள்**

ID, ASD, CP ஆகிய குறைபாடுகள் தவிர மீதமுள்ள 18 வகையான குறைபாடுடைய மாணவர்கள் அனைவரும், அவரவருக்கான பிரிவிலுள்ள அனைத்துப் போட்டிகளிலும் சக மாணவர்களுடன் பங்கேற்கலாம். அவ்வாறு

பங்குபெறும் மாணவர்களின் தகவல்கள் பள்ளியளவில் EMIS தளத்தில் அந்தந்த பிரிவிற்கான போட்டிகளில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

| **நிலைகள்** | பிரிவுகள் | பங்கேற்பாளர் விவரங்கள் உள்ளீடு செய்தல் & போட்டி நடைபெறும் நாட்கள் | வெற்றியாளர்கள் விவரங்கள் உள்ளீடு செய்வதற்கான கடைசி நாள் |
|---|---|---|---|
| பள்ளி | 1 முதல் 12–ம் வகுப்பு வரை | 04.08.2025 முதல் 18.08.2025 வரை | 20.08.2025 |
| குறுவட்டம் (Cluster) | 1 முதல் 5–ம் வகுப்பு வரை | 25.08.2025 முதல் 29.08.2025 வரை | 02.09.2025 |
| வட்டாரம் | 1 முதல் 12–ம் வகுப்பு வரை | 13.10.2025 முதல் 17.10.2025 வரை | 23.10.2025 |
| மாவட்டம் | 1 முதல் 12–ம் வகுப்பு வரை | 27.10.2025 முதல் 31.10.2025 வரை | 03.11.2025 |
| மாநிலம் | 1 முதல் 12–ம் வகுப்பு வரை | 24.11.2025 முதல் 28.11.2025 வரை | 03.12.2025 |

1 & 2 மற்றும் 3 முதல் 5 வரையிலான பிரிவினருக்கு கரூர் மாவட்டத்திலும்; 6 முதல் 8 வரையிலான பிரிவினருக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்திலும்; 9 & 10 வகுப்பு பிரிவினருக்கு சேலம் மாவட்டத்திலும்; 11 & 12 வகுப்பு பிரிவினருக்கு புதுக்கோட்டை மாவட்டத்திலும் மாநில அளவிலான போட்டிகளை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவர்களின் அனைத்து வகையான கலைத்திறன்களை வெளிக்கொணரும் வகையில், அந்தந்த பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக மாணவர்களை ஊக்கப்படுத்தி, ஒவ்வொரு மாணவரும் குறைந்தது ஒரு போட்டியிலாவது பங்குபெறச்செய்வது சார்ந்த பள்ளி தலைமையாசிரியரின் பொறுப்பாகும்.

மேற்குறிப்பிட்டவாறு, கலைத்திருவிழாப் போட்டிகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களின் பங்கேற்பினை உறுதி செய்ய பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறும், அதனை தொடர் ஆய்வின் வாயிலாக உறுதிசெய்யுமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இயக்குநர்**
**தொடக்க கல்வி**

**இயக்குநர்**
**பள்ளிக் கல்வி**

**மாநில திட்ட இயக்குநர்**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**இணைப்பு :**

1. கலைத்திருவிழா 2025 – 26 – பொதுவான விதிமுறைகள்
2. கலைத்திருவிழா 2025–26 –மதீப்பீடு செய்வதற்கான விதிமுறைகள்

**பெறுநர்:**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

**நகல்:**

1. அரசு செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை – 09.
2. உறுப்பினர் செயலர், மாதிரிப் பள்ளிகள், சென்னை – 06.
3. ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், சென்னை–05.

**இணைப்பு –1:** **<u>கலைத்திருவிழா 2025 – 26 – பொதுவான விதிமுறைகள்</u>**

- அனைத்துப் போட்டிகளும் இவ்வாண்டின் மையக்கருத்தான **"பசுமையும் பாரம்பரியமும்"** என்பதன் அடிப்படையிலேயே இருத்தல் வேண்டும்.
- தேவையான போட்டிகளுக்கான பாடல் தேர்வானது தமிழ் மொழியிலேயே இருத்தல் வேண்டும்.
- பேச்சுப் போட்டி மற்றும் நாடகப்பிரிவில் அனைத்தும் தமிழ் மொழியிலேயே இருத்தல் வேண்டும்.
- பிரிவு 2–ல், 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான தேசபக்திப் பாடல்கள் போட்டியில் மட்டும், தேசிய ஒருமைப்பாடு உணர்வு கொண்ட அல்லது **"பசுமையும் பாரம்பரியமும்"** சார்ந்த திரைப்படப் பாடல்கள் இடம்பெறலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பாடலின் வரிகள் முழுவதும் மேற்கண்ட கருத்தின் அடிப்படையில் மட்டுமே அமைதல் வேண்டும். இப்பாடல்களில் உள்ள எந்த ஒரு வரிகளும் அல்லது சொற்களும் மேற்கண்ட கருத்தின் அடிப்படையில் இல்லாமல் இருப்பின், அவை போட்டியின் தெரிவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- களிமண் பொம்மைகள் போட்டியில் இயற்கையான களிமண் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
- பிரிவு 2–ல், 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் எத்தனை திருக்குறளை வேண்டுமானாலும் ஒப்புவிக்கலாம்.
- பிரிவு 1–ல், ஒன்றாம் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான வண்ணம் தீட்டுதல் A4 அளவு அட்டையில் (Chart) வரைதல் வேண்டும். அந்தந்த நிலைக்கான போட்டியின்போது, ஒரு ஓவியத்தை அந்தந்த அளவிலான குழு (பள்ளி/வட்டார/மாவட்ட அளவிலான குழு) தீர்மானித்து வழங்க வேண்டும்.

- பிரிவு 2 மற்றும் 3–ல், ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் A4 அளவு அட்டையில் (Chart) வரைதல் வேண்டும்.
- பிரிவு 4 மற்றும் 5–ல், ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் மற்றும் கேலிச் சித்திரம் வரைதல் ஆகியவை A3 அளவு அட்டையில் (Chart) வரைதல் வேண்டும்.
- வரைதல் சார்ந்த போட்டிக்குத் தாள்கள் (Paper) மட்டுமே வழங்கப்படும். பிற பொருள்கள் அனைத்தையும் போட்டியாளரே கொண்டு வர வேண்டும்.
- செவ்வியல் இசைக்கு (Classical Music) சுதிப்பெட்டி பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் போட்டியாளர்கள் தமக்குப் பிடித்த ராகத்தில் பாட அனுமதியுண்டு.
- கிராமிய நடனங்களில் அதற்கேற்ற கிராமியத் தன்மை சார்ந்த உடைகளையே அணிதல் வேண்டும். மிகை ஒப்பனையான அலங்கார ஆடைகளை அணிதல் கூடாது.
- கிராமிய நடனம் / பரதநாட்டியம் / குழு நடனம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட இசை / பாடல்களை CD / Pen Drive பயன்படுத்திக் கொள்ளலாம்.
- பின்புலப் பங்கேற்பாளர் / பின்னிசை இசைப்போர் யாவரும் அந்தந்த பிரிவு/ வகைக்கான வயதுடையவர்களாகவே இருக்க வேண்டும்.
- பாரம்பரியமாகப் பழக்கத்தில் உள்ள கலை வடிவங்களைப் படைக்கும்போது பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ராகம், தாளம் தவிர புதிய ராகம், புதிய தாளம் மற்றும் மிகைப்படியான நாட்டிய அசைவுகள் முதலியன அனுமதிக்கப்பட மாட்டாது.
- ஓரங்க நாடகம் அல்லது ஒரு நீண்ட நாடகத்தின் ஏதேனும் ஓர் அங்கம் 10 மணித்துளிகளுக்குள்ளாக நடிப்பதற்கு அனுமதிக்கப்படும். பின்னணி இசைக்கு (ஒலி நாடா) பயன்படுத்தலாம்.
- பாரம்பரியக் கருவிகள், உபகரணங்கள் (குத்துவிளக்கு, செப்புக்குடம்) எவையேனும் தேவைப்படின் அவற்றைப் போட்டியாளர்கள் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குழுவாகப் படைக்கப்படும் கலை இனங்களில் குழுவில் பங்கு கொள்ளும் அனுமதிக்கப்பட்ட அனைவருக்கும் (தகுதி இருப்பின்) சான்றிதழும், பரிசும் வழங்கப்பட வேண்டும்.
- செவ்வியல் இசை (வாய்ப்பாட்டு), செவ்வியல் இசைக்கருவி பாடல் மற்றும் இவை போன்ற கலை வடிவங்களைப் போட்டி இனங்களில் இடம்பெறாதவை என இனம் காணப்பட்டால் அவற்றைக் காட்சிப்படைப்பாக படைக்கலாம்.

போட்டியின் விதிகளுக்கு இவை உட்படாது. மேலும் போட்டியின் தகுதித் தேர்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

- நடுவர்களை நியமிப்பதில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். போதுமான தகுதியும் அனுபவமும் நிறைந்தவரே நடுவராகத் தகுதியுடையவராகக் கருதப்படுவார். நடுவரை நியமிப்பதில் உள்ள நெறிமுறை, விதிமுறை யாவும் முற்றிலுமாகக் கடைபிடிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு கலை இனத்திற்கும் கட்டாயமாக 3 நடுவர்கள் நியமிக்கப்பட வேண்டும். மூவரும் தனித்தனியாக அமர்ந்து பிறரைக் கலந்தாலோசிக்காமல் தமது மதிப்பீட்டை மதிப்பெண்ணாகப் பதிவு செய்தல் வேண்டும். ஒருவர் அளிக்கும் மதிப்பெண் மற்றவருக்குத் தெரியக்கூடாது.
- நடுவர்களின் மதிப்பீடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு (மூன்று மதிப்பெண்களும் கூட்டப்பட்டு அதன் சராசரி காணப்படும்) அடிப்படையில்தான் முடிவுகள் அமையும். ஒரே மதிப்பெண்ணை இருவர் பெற்றிருந்தால் – (Tie Breaker) நடுவர்கள் கலந்தாலோசித்து இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும்.
- போட்டிகள் முடிவுற்றபின் நடுவர்களின் மதிப்பெண்கள் தொகுக்கப்பட்டு போட்டி நடைபெற்ற நாளன்றே அப்போட்டிக்கான முடிவுகள் போட்டியாளர்கள் அனைவரின் முன்னிலையில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**இணைப்பு –2: கலைத்திருவிழா 2025–26 –மதீப்பீடு செய்வதற்கான விதிமுறைகள்**

கலைத்திருவிழாப் போட்டிகளை மதிப்பீடு செய்வதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு போட்டிக்குமான விதிமுறைகளை பின்பற்றி நடுவர்கள் போட்டியாளர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் வேண்டும். இதில் எந்த ஒரு மாற்றமும் செய்தல் கூடாது.

| வாய்ப்பாட்டு – செவ்வியல் இசை | |
|---|---|
| குரல் | 20 மதிப்பெண்கள் |
| சுதி | 20 மதிப்பெண்கள் |
| லயம் | 20 மதிப்பெண்கள் |
| பாடலின் வரி சுத்தம் | 20 மதிப்பெண்கள் |
| கற்பனை சுரம் | 20 மதிப்பெண்கள் |

| வாய்ப்பாட்டு – நாட்டுப்புற பாடல் | |
|---|---|
| குரல் | 20 மதிப்பெண்கள் |
| சுதி | 20 மதிப்பெண்கள் |
| தாளம் | 20 மதிப்பெண்கள் |
| ஒலிப்புமுறை மற்றும் கருத்து | 20 மதிப்பெண்கள் |
| பாவம் (மெய்ப்பாடு) | 20 மதிப்பெண்கள் |

| வில்லுப்பாட்டு | |
|---|---|
| சுதி | 20 மதிப்பெண்கள் |
| லயம் / தாளம் | 20 மதிப்பெண்கள் |
| மொழிச் சுத்தம் | 20 மதிப்பெண்கள் |
| கருத்து வெளிப்பாடு | 20 மதிப்பெண்கள் |
| இசை, ஒருங்கமைப்பு (குழுச் செயல்பாடு) | 20 மதிப்பெண்கள் |

| கருவி இசை (காற்றிசைக் கருவி): | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண்கள் |
| லயம் | 25 மதிப்பெண்கள் |
| பாவம் | 25 மதிப்பெண்கள் |
| கற்பனை சுரம் | 25 மதிப்பெண்கள் |

| கருவி இசை (தந்தி இசைக் கருவி): | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண்கள் |
| லயம் | 25 மதிப்பெண்கள் |
| பாவம் | 25 மதிப்பெண்கள் |
| கற்பனை சுரம் | 25 மதிப்பெண்கள் |

| கருவி இசை : (Percussion type) (தோல் கருவிகள்) | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண்கள் |
| லயம் | 25 மதிப்பெண்கள் |
| இசைக்கும் தன்மை | 25 மதிப்பெண்கள் |
| பாட்டுக்கு வாசிக்கும் முறை | 25 மதிப்பெண்கள் |

| செவ்வியல் நடனம் | |
|---|---|
| தாளம் | 20 மதிப்பெண்கள் |
| பாவம் | 20 மதிப்பெண்கள் |
| அங்க சுத்தம் | 20 மதிப்பெண்கள் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண்கள் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண்கள் |

| கிராமிய நடனம் | |
|---|---|
| பக்கவாத்தியங்கள் – பாரம்பரிய இசைக்கருவிகளுடன் | 20 மதிப்பெண்கள் |
| வகைமைக்கு ஏற்ற ஆட்ட அடவுகள் | 20 மதிப்பெண்கள் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண்கள் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண்கள் |
| தாளம் | 20 மதிப்பெண்கள் |

| ஓவியம் / வரைந்து வண்ணம் தீட்டுதல் | |
|---|---|
| வரைவின் நேர்த்தி | 20 மதிப்பெண்கள் |
| சீரான வண்ணப்பூச்சு | 20 மதிப்பெண்கள் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 20 மதிப்பெண்கள் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 20 மதிப்பெண்கள் |
| ஒளியும் நிழலும் | 20 மதிப்பெண்கள் |

| மாறுவேடப் போட்டி | |
|---|---|
| வேடப் பொருத்தம் | 25 மதிப்பெண்கள் |
| நடிப்புத் திறன் | 25 மதிப்பெண்கள் |
| பேச்சாற்றல் | 25 மதிப்பெண்கள் |
| மேடை ஆளுகை (அச்சமின்மை) | 25 மதிப்பெண்கள் |

| கதை கூறுதல் | |
|---|---|
| கதைக்கரு | 25 மதிப்பெண்கள் |
| உடல் மொழி | 25 மதிப்பெண்கள் |
| உச்சரிப்பு | 25 மதிப்பெண்கள் |
| இயல்பு தன்மை | 25 மதிப்பெண்கள் |

| குழு நடனம் (அனைத்து வகைக் குழு நடனங்களும்) | |
|---|---|
| ஆடுபவர்களின் ஒத்திசைவு | 20 மதிப்பெண்கள் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண்கள் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண்கள் |
| வகைமைக்கு ஏற்ற அடவுகள் | 20 மதிப்பெண்கள் |
| பக்க வாத்தியங்கள் பாரம்பரிய இசைக்கருவிகள் | 20 மதிப்பெண்கள் |

| நாடகம் (தெருக்கூத்து/இலக்கிய நாடகம் / வீதி நாடகம்) | |
|---|---|
| கதைக்கரு | 20 மதிப்பெண்கள் |
| நடிப்பு ஒருங்கிணைப்பு | 20 மதிப்பெண்கள் |
| குரல் எடுப்பு | 20 மதிப்பெண்கள் |
| இயக்கம் | 20 மதிப்பெண்கள் |
| உடல் மொழி | 20 மதிப்பெண்கள் |

| பொம்மலாட்டம் | |
|---|---|
| பொம்மைகளின் நேர்த்தி | 25 மதிப்பெண்கள் |
| சொல்லும் கருத்து | 25 மதிப்பெண்கள் |
| தாளம் / பாடல் வளம் | 25 மதிப்பெண்கள் |
| பொம்மை இயக்கத்தின் நேர்த்தி | 25 மதிப்பெண்கள் |

| பலகுரல் (Mimicry) | |
|---|---|
| கருத்து | 25 மதிப்பெண்கள் |
| போலச் செய்தல் திறன் (Mimicry) | 25 மதிப்பெண்கள் |
| உடல் மொழி | 25 மதிப்பெண்கள் |
| குரல் வளம் | 25 மதிப்பெண்கள் |

| தனியாள் / பாவனை நடிப்பு: (Mono Act / Miming) | |
|---|---|
| கதை | 25 மதிப்பெண்கள் |
| உடல்மொழி | 25 மதிப்பெண்கள் |
| உரையாடும் திறன் | 25 மதிப்பெண்கள் |
| மேடை ஆளுமைத் திறன் | 25 மதிப்பெண்கள் |

| வண்ணம் தீட்டுதல் (கொடுக்கப்படும் படத்தில்) | |
|---|---|
| சீரான வண்ணப்பூச்சு | 25 மதிப்பெண்கள் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 25 மதிப்பெண்கள் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 25 மதிப்பெண்கள் |
| ஒளியும் நிழலும் | 25 மதிப்பெண்கள் |

| ஒப்புவித்தல் (அனைத்து வகைகளும்) | |
|---|---|
| உச்சரிப்பு | 25 மதிப்பெண்கள் |
| நினைவாற்றல் | 25 மதிப்பெண்கள் |
| குரல் வெளிப்பாட்டின் ஆளுமை | 25 மதிப்பெண்கள் |
| வெளிப்பாட்டின் நயம் | 25 மதிப்பெண்கள் |

| பேச்சுப் போட்டி | |
|---|---|
| மேடை அச்சமின்மை | 20 மதிப்பெண்கள் |
| ஒலிப்பு முறை | 20 மதிப்பெண்கள் |
| மொழித்தூய்மை | 15 மதிப்பெண்கள் |
| உரைத்தெளிவு | 15 மதிப்பெண்கள் |
| பேச்சின் தொடரோட்டம் | 15 மதிப்பெண்கள் |
| குரல் ஏற்ற இறக்கம் | 15 மதிப்பெண்கள் |

| களிமண் பொம்மைகள் | |
|---|---|
| படைப்பு/வெளிப்பாடு | 25 மதிப்பெண்கள் |
| புதுமை/உத்தி | 25 மதிப்பெண்கள் |
| இசைவுப் பொருத்தம் | 25 மதிப்பெண்கள் |
| நேர்த்தி (perfection) | 25 மதிப்பெண்கள் |

| மெல்லிசை (தனிப்பாடல்) | |
|---|---|
| குரல் | 25 மதிப்பெண்கள் |
| சுதி | 25 மதிப்பெண்கள் |
| லயம் | 25 மதிப்பெண்கள் |
| பாடலின் வரி சுத்தம் | 25 மதிப்பெண்கள் |

| தேசபக்திப் பாடல்கள் | |
|---|---|
| குரல் | 20 மதிப்பெண்கள் |
| பாவம் | 20 மதிப்பெண்கள் |
| உணர்வு பூர்வ வெளிப்பாடு | 20 மதிப்பெண்கள் |
| பாடலின் வரி சுத்தம் | 20 மதிப்பெண்கள் |
| உச்சரிப்பு | 20 மதிப்பெண்கள் |

| கேலிசித்திரம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | |
|---|---|
| வரைவின் நேர்த்தி | 20 மதிப்பெண்கள் |
| சீரான வண்ணப்பூச்சு | 20 மதிப்பெண்கள் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 20 மதிப்பெண்கள் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 20 மதிப்பெண்கள் |
| ஒளியும் நிழலும் | 20 மதிப்பெண்கள் |

| ரங்கோலி | |
|---|---|
| வரைவின் நேர்த்தி | 20 மதிப்பெண்கள் |
| சீரான வண்ணப்பூச்சு | 20 மதிப்பெண்கள் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 20 மதிப்பெண்கள் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 20 மதிப்பெண்கள் |
| ஒளியும் நிழலும் | 20 மதிப்பெண்கள் |